**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC 359/2020**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 05.06.2023**

| | |
|---|---|
| **Name : கார்த்திகேயன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை–**

1) நான் மின்சார வாரியத்திலிருந்து ஓய்வு பெற்றள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவசிகிச்சையில் உள்ளதால் கோயம்புத்தூரில் வாழ்ந்துவருகிறேன். எனது வயது 72 ஆகும். எதிரி எனக்கு பழக்கமானவர். எதிரியின் அப்பா எனக்கு ஓரளவுக்கு தெரியும். எதிரிக்கு வயது 36 இருக்கும். எதிரி மகா சிமெண்ட்ன் ஏஜெண்ட் ஆவார். பெயிண்டிங் கடை வைத்துள்ளார்.

2) மேற்சொன்ன வியாபாரம் எங்கு செய்கிறார் என்றால் தங்கமாபுரிபட்டிணத்தில் வைத்து நடத்தி வருகிறார். எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் தங்கமாபுரிபட்டிணத்தில் உள்ள முத்துகுமாரசாமி வீதியில் குடியிருந்துவருகிறார். எதிரி திருமணம் ஆனவரா என்றால் ஆமாம் குழந்தையும் உள்ளது. எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எந்த விலாசம் என்றால் குடியிருப்பு விலாசத்திற்கு அனுப்பினேன்.

3) கைமாற்று கடன் எந்த தேதியில் கேட்டார் என்றால் 10 நாட்களுக்கு முன்பாக கேட்டார். நான் 10.10.2019–ம் தேதியில் கொடுத்தேன். 5 மாதத்தில் திருப்பி தருவதாக கூறி கடன் பெற்றார். அந்த கடனை திருப்பி கொடுக்காததால் காசோலையை வசூலுக்கு செலுத்தினேன். கைமாற்று கடன் வாங்குவதற்கு முன்பாகவே காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றால் 10 நிமிடங்களுக்கு முன் கொடுத்தார்.

4) இந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காசோலை எண். 000219 ஆகும். அது கே.வி.பி. மேட்டுர்

கிளையை சார்ந்தது. நான் காசோலையை 11.03.2020-ம் தேதி வசூலுக்கு செலுத்தினேன். காசோலை Dishonour ஆகிவிட்டது. பிறகு அறிவிப்பு அனுப்பினேன். எதிரி பதிலறிவிப்பு அனுப்பினார். பதிலறிவிப்பில் என்ன சொல்லியிருந்தார் என்றால் நான் பணமே வாங்கவில்லை என்று சொல்லியிருந்தார். எங்களுக்குள் எந்தவிதமான நட்பும் இல்லை என்று சொல்லியுள்ளார்.

5) எனது வயதிற்கு எதிரியுடன் நட்பு வைத்திருக்க வாய்பில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.